**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4–ஆம் தேதி வியாழக்கிழமை**

**இ.ம.எண்.2/2025 இன் அ.வ.எண்.70/2014**

1. ஜோதிராஜா
2. கோமதி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர் /

1. காளியப்பன்
2. பிச்சையம்மாள் (இறப்பு)
3. அரங்கராஜ்
4. தர்மராஜ்
5. ராணி
6. தீபா
7. அழகர்சாமி
8. சார்பதிவாளர், தரகம்பட்டி ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் இம்மனு கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–ன் மனுவில் கண்டுள்ளவாறு தாவா பிராதை திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 12.02.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 22.08.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 04.12.2025 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.T.சரவணன் – வழக்கறிஞர் |
| 1, 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் | : | அசல் வழக்கில் தோன்றா தரப்பினர்கள் |
| 2–ம் எதிர்மனுதாரர் | : | இறந்துவிட்டார் |
| 3–ம் எதிர்மனுதாரருக்காக | : | திரு.R.இளஞ்செழியன் – வழக்கறிஞர் |
| 7–ம் எதிர்மனுதாரருக்காக | : | திரு.M.மதியழகன் – வழக்கறிஞர் |

8–ம் எதிர்மனுதாரருக்காக : திரு.A.நாகராஜன்– வழக்கறிஞர் ஆஜராகி, பின்னிட்டு எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

1) **மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வழக்கில் குறிப்பிட்டுள்ள 16 முதல் 19 அயிட்ட சொத்துக்கள் குடும்பத்திற்கு பாத்தியப்படாத சொத்துக்கள் என்ற சங்கதி தெரிய வந்ததாகவும், சர்வே எண்.689/4A, 689/4C, 697/2B–ல் உள்ள சொத்துக்கள் மனுதாரர்களின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டவை என்றும், தவறுதலாக மேற்படி சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்படாமல் விடுபட்டுவிட்டன என்றும், எனவே, மேற்படி சொத்துக்களை வழக்கில் சேர்க்க அசல் பிராதை திருத்தம் செய்ய வேண்டி இருப்பதால் மனுவில் கண்ட விவரப்படி அசல் பிராதை திருத்த அனுமதியளித்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மூன்றாம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனையவை மறுக்கப்படுகிறது. கடந்த 22.04.2021–ம் தேதி முதல் பிரதிவாதி, மூன்றாவது பிரதிவாதிக்கு சர்வே எண்.689/4A, 689/4C, 697/2B–ல் 0.69 சென்ட், 0.13–1/2 சென்ட், ஏக்கர் 2.37 சென்ட் ஆக கூடுதல் ஏக்கர் 3.19–1/2 சென்ட் பொருத்து ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். இந்த எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் படி கிடைத்த சொத்துக்களை வழக்கில் சேர்க்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல கட்சி இல்லை என்பதால் வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

2) **ஏழாம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ள புல எண்கள் பொருத்து இந்த எதிர்மனுதாரருக்கு எதுவும் தெரியாது. இந்த எதிர்மனுதாரர் குடும்ப உறுப்பினர் கிடையாது. வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்கும் இந்த எதிர்மனுதாரருக்கும் எந்தவிதத்திலும் சம்மந்தம் கிடையாது. வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரரின் மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

4) **தீர்வு :-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வழக்கில் குறிப்பிட்டுள்ள 16 முதல் 19 அயிட்ட சொத்துக்கள் குடும்பத்திற்கு பாத்தியப்படாத சொத்துக்கள் என்ற சங்கதி தெரிய வந்ததாகவும், சர்வே எண்.689/4A, 689/4C, 697/2B-ல் உள்ள சொத்துக்கள் மனுதாரர்களின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டவை என்றும், தவறுதலாக மேற்படி சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்படாமல் விடுபட்டுவிட்டன என்றும், எனவே, மேற்படி சொத்துக்களை வழக்கில் சேர்க்க அசல் பிராதை திருத்தம் செய்ய வேண்டி இருப்பதால் மனுவில் கண்ட விவரப்படி அசல் பிராதை திருத்த அனுமதியளித்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு சங்கதிகளை ஆட்சேபனை செய்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது.

தரப்பினர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள பூசல்களை முழுமையாக களைவதற்கும், மேற்படி வழக்கில் உரிய தீர்வு முடிவினை ஏட்டுவதற்கும் மேற்படி திருத்தமானது அவசியமாகும். இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையினை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

7) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4–ம் நாள் அவையறிய புகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.04 18:21:11 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.04 18:21:15 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.